எனவே, ஆம்பூரில் தற்போது செயல்பட்டு வரும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம் மாற்றப்படும் என்கிற பயம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை. அடுத்தகட்டமாக, தொழிலாளர் நலனுக்காக பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்ய இருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த நல்லரசு, முதலில் மாவட்டத் தலைநகரங்களிலே அந்த ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டப்பட்டதற்குப் பின்னால், அந்தந்தப் பகுதியிலே தேவைகளுக்கேற்ப, நிதிநிலைகளுக்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி சிந்திக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

321—

அங்கன்வாடி கட்டடம்

***52873—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வளையாம்பட்டு ஊராட்சி, வளையாம்பட்டு ஆதி திராவிடர் காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, வளையாம்பட்டு ஆதி திராவிடர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு, புல எண் 106/2G என்கிற இடத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முப்படையின் வீரத்தை தனக்கே கொண்ட அம்மா எனும் மூன்றெழுத்து மந்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடல் அலையே! வான்மழையே! (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் வரலாறே! தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே எனது நலன் என்கின்ற இலட்சியக் கனவோடு ஏழை எளியோர் ஏற்றம் பெற, எண்ணிலடங்கா திட்டங்கள் தந்து, "போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும். ஏற்றதொரு கருத்தே எனதுள்ளம் என்றால் எவர் வரினும் நில்லேன், அஞ்சேன், கெஞ்சேன்" என்கின்ற வைர வரிகளுக்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களாக இருந்தாலும் சரி, உள்ளூர் தமிழர்களாக இருந்தாலும் சரி, இலங்கைத் தமிழர்களாக இருந்தாலும் சரி, சொல்லளவில் நிற்காமல் செயல் வடிவில் சாதனைகளை நிகழ்த்திக் காட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவி, தமிழினத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழன் தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக, வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானங்களை சட்டமன்றத்தில் நிறைவேற்றிய ஈரோட்டுப் புயலையும், காஞ்சித் தென்றலையும், பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த பொன்மனச் செம்மலையும், ஓர் உருவில் பெற்ற தாய், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் பன்மொழிப் புலவர், முத்தமிழ் வித்தகர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், வளையாம்பட்டு ஊராட்சி, 7,500 வாக்காளர்களை உள்ளடக்கிய, 10,500 மக்கள்தொகை கொண்ட, 12 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியில் 10 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 2 கட்டடங்களும், அரசுமூலம் 4 கட்டடங்களும் கட்டப்பட்டு, மையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள அருந்ததியர் காலனி, அருந்ததியர் மருத்துவர் காலனி, காமராஜ் நகர், இந்திரா நகர் ஆகிய 4 மையங்களுக்கு அரசு சொந்தக்

2015 செப்டம்பர் 22]

கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதிகளுக்கெல்லாம், புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே ஏற்கெனவே ஒரு குழு இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தொகை, அந்தப் பகுதியிலே கல்வி பயிலக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை, இவற்றையெல்லாம் கணக்கிலே கொண்டு, அந்தக் குழு ஆய்வு செய்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியிலிருந்து கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 322, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

322—

தங்கும் விடுதி

***50258 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்திலுள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS